**Paper Code No.: 39**

# இரண்டாம் பருவ மதிப்பீடு 2017-18
## மேனிலை முதலாம் ஆண்டு
## சிறப்புத்தமிழ்
# Second Term Evaluation 2017-18
## Higher Secondary First Year
## Optional (Part III - Tamil)

வகுப்பு : HSE I | நேரம் : $2\frac{1}{2}$ மணி

மதிப்பெண் : 80

குறிப்பு :

- தேர்வுக்கு முன்புள்ள 15 நிமிடம் சிந்தனை நேரமாகும்.
- வழிமுறைகளை நன்கு வாசித்துத் தேவையான வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.

***(1, 2 வினாக்களுக்குச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.)*** (2 × 1 = 2)

1. ‘பாண்டியன் பரிசு’ எனும் நூலின் ஆசிரியர்.

அ) பாரதி ஆ) பாரதிதாசன்

இ) கண்ணதாசன் ஈ) கவிமணி

2. “நெத்திக்கு சிட்டிகளாம்
நெலம் பார்க்கும் கண்ணாடி
வயலுக்குச் சல்லடமாம்
வாகுக்கை பொன்னாலே”

இக்கவிதை எந்த வகையைச் சார்ந்தது?

அ) மரபுக்கவிதை ஆ) நாட்டுப்புறப்பாடல்

இ) ஹைகூ ஈ) சென்ரியு

***(3 முதல் 5 வரையுள்ள எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.)*** (3 × 2 = 6)

3. ‘படபட’, ‘வருகவருக’ என்ற சொற்களின் இலக்கணக் குறிப்புகளை எழுதுக?
4. புதுக்கவிதையின் குறிப்பிடத்தக்க இயல்புகளில் இரண்டினைத் தருக.
5. தமிழ்மொழிக்குச் ‘செம்மொழி’ எனும் பெருமை கிடைப்பதற்குக் காரணமாக அமைந்த தகுதிப்பாடுகளில் நான்கினைச் சுட்டுக.

***(6 முதல் 11 வரையுள்ள வினாக்களுள் எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக.)*** (5 × 4 = 20)

6. “அறிமுகம் இல்லாத கைகளால்
கண்ணீர் துடைக்கப்பட்டவனே!
சக மனிதனின்
ஒரு கண்ணீர் துளியையாவது
நீ துடைத்திருக்கிறாயா?”

என்ற கவிதையில் இடம்பெறும் கருத்தினைக் குறித்து விவாதக்குறிப்பு தயாரிக்கவும்.

7. வாய்மொழி இலக்கியங்களில் வெளிப்படும் வாழ்வியல் கூறுகளைத் தொகுத்து எழுதுக.

8. அ) இணையப் பாதுகாப்பு வழிகளில் இரண்டினை எழுதுக.

ஆ) இணையக் குற்றங்களில்(சைபர் க்ரைம்) ஏற்றுக்கொள்ளப்படும் புகார்களில் நான்கினைக் கூறுக?

9. "எக்கா, உம் புள்ளைகள கண்ணுல காங்கவிடாம அடிச்சுயே, அதுக எம்புட்டு கெட்டிக்கார புள்ளைகன்னு இப்ப பாத்தியா? அதுக மட்டும் இப்ப இம்புட்டுக் கருத்தா வீட்டுக்குள்ள ஒளிஞ்சிக்கிட்டு இவன் களாணித்தனத்த பாக்காம இருந்தா ஊரெல்லாமில்ல இவன் பாம்பு புடிக்கேன்னு ஏமாத்தி ஒரு மூட தானியத்த அள்ளிட்டுப் போயிருப்பான்."

மேற்கண்ட பத்தியில் இடம்பெற்றுள்ள வட்டார வழக்குச் சொற்களுக்கு உரிய ஆறு தூய தமிழ்ச் சொற்களைக் கண்டறிந்து அகரவரிசைப்படுத்தி எழுதவும்.

10. 'ஆற்றில் போட்டாலும் அளந்து போடு', 'மின்னுவதெல்லாம் பொன்னல்ல' - என்னும் பழமொழிகளின் விளக்கம் எழுதுக.

11. கீழ்க்காணும் நிகழச்சி நிரலின் அடிப்படையில் உங்கள் பள்ளியில் நடைபெற்ற கருத்தரங்கம் குறித்த பத்திரிகைச் செய்தி தயார்செய்க.

**நிகழ்ச்சி நிரல்**

**நாட்டுப்புற இலக்கியக் கருத்தரங்கம்**

| | | |
|---|---|---|
| நாள் | : | 01.12.2017 |
| இடம் | : | பள்ளிக் கலையரங்கம் |
| இறை வணக்கம் | : | மாணவிகள் |
| வரவேற்புரை | : | மாணவர் செயலர் |
| தலைமையுரை | : | பள்ளி முதல்வர் |
| வாழத்துரை | : | பெற்றோர்-ஆசிரியர் சங்கத் தலைவர் |
| அமர்வுத்தலைவர் | : | தமிழாசிரியர் |
| கட்டுரையாளர் | : | மாணவர் |
| தலைப்பு | : | நாட்டுப்புற இலக்கியங்களின் சிறப்பு |
| நன்றியுரை | : | வகுப்புத் தலைவர் |

**நாட்டுப்பண்**

***(12 முதல் 19 வரையுள்ள வினாக்களுள் எவையேனும் ஆறு வினாக்களுக்கு விடை எழுதுக.)***

(6 × 6 = 36)

12. "எங்கே அழகும் சுதந்திரமும் உண்டோ
அங்கே தான்
மானுடம் திருவிழா கொண்டாடுகிறது"

என்ற கவிதையை வாசித்து விமர்சனக்குறிப்பு எழுதுக.

13. 'பச்சை வயல்' என்ற திரைக்கதை ஆசிரியர் மகிரிஷியின் படைப்புத்திறனைப் பாராட்டி வாசகர் கடிதம் தயார்செய்க.

14. 'தமிழும் தமிழரும்' என்ற தலைப்பில் அனைத்துக் கேரளத் தமிழ்ப் பேரவை நடத்தும் கருத்தரங்கில் கட்டுரை வாசிப்பதற்காகத் 'தமிழ்மொழியின் தனித்தன்மைகள்' என்ற தலைப்பில் கருத்தரங்கக் கட்டுரை தயாரிக்க.

15. ஓசோன் தினத்தை முன்னிட்டு பள்ளி அறிவியல் மலரில் வெளியிட, 'நகரமயமாக்கத்தின் விளைவுகள்' என்ற தலைப்பில் சிறு கட்டுரை தயார்செய்க.

16. இன்றைய வாழ்க்கைச் சூழலில் நாட்டுப்புறக்கலைகள் சிறப்புக்கவனம் பெறுவதில்லை. அழிந்துவரும் நாட்டுப்புறக்கலைகளைப் பாதுகாக்கும் கருத்தினை வலியுறுத்தித் தலையங்கம் எழுதுக.

17. மாவட்ட மைய நூலகம் சார்பில் நிகழ்த்தப்படவிருக்கும் இலக்கிய விழாவில் 'புதுக்கவிதையில் வெளிப்படும் சமூக விழிப்புணர்வுச் சிந்தனைகள்' என்ற தலைப்பில் சொற்பொழிவுக்குறிப்பு தயார்செய்க?

18. உங்கள் பள்ளியில் உலகத் தாய்மொழி நாள் கொண்டாடுவதை ஒட்டி மொழியியல் அறிஞர் வருகை தருகிறார். அவரிடம் வினவுவதற்காகத் 'தமிழ்மொழி' தொடர்பான கருத்துகள் உள்ளடக்கிய ஐந்து வினாக்கள் தயாரிக்கவும்.

19. அகில இந்திய வானொலி நிலையத்தில் தமிழ்ச்சொல்மாலை நிகழ்ச்சியில் பங்கேற்க 'பாலுமகேந்திராவும் திரைப்படமும்' என்ற தலைப்பில் வானொலி உரை தயார் செய்க.

***(20 முதல் 22 வரையுள்ள வினாக்களுள் எவையேனும் இரண்டனுக்கு விடை எழுதுக.)***

(2 × 8 = 16)

20. 'இணையம் கற்போம்! இலக்கியம் வளர்ப்போம்!' என்ற பொருண்மையில் உங்கள் பள்ளியில் நடைபெறும் இணையத்தமிழ் குறித்த கருத்தரங்கில் பேசுவதற்காக, 'இணையத்தமிழின் ஈடில்லா வளர்ச்சி' என்ற தலைப்பில் சொற்பொழிவு உரை தயார்செய்க.

21. 'நாட்டுப்புற இலக்கியங்கள் வெளிப்படுத்தும் பண்பாட்டுச் செய்திகள்' என்ற தலைப்பில் விளக்கக் கட்டுரை தயார்செய்யவும்.

22. தமிழ்மொழி இன்று பல்வேறு சவால்களை எதிர்கொண்டு வருகின்றது என்ற கருத்தின் அடிப்படையில் திறனாய்வுக் கட்டுரை தயார்செய்க.

Set: 1

# இரண்டாம் பருவ மதிப்பீடு 2017-2018
## மேனிலை முதலாம் ஆண்டு
## சிறப்புத்தமிழ்
## மதிப்பீட்டுக் குறிப்புகள்

**Higher Secondary First Year - Optional**

**HSE: I**

**Scoring Key**

| வரிசை எண் | மதிப்பீட்டுக் குறிப்புகள் | மதிப்பெண் விளக்கம் | மொத்தம் மதிப்பெண் |
|---|---|---|---|
| 1. | பாரதிதாசன் | 1 | 1 |
| 2. | நாட்டுப்புறப் பாடல் | 1 | 1 |
| 3. | படபட - இரட்டைக்கிளவி<br>வருகவருக - அடுக்குத்தொடர் | 1<br>1 | 2 |
| 4. | கவிதையின் வெளிப்பாட்டிற்குத் தேவையில்லாத எந்தவொரு சிறு சொல்லையும் சேர்க்கக் கூடாது<br>இறுக்குமான யாப்பு முறைகளை விலக்கிவிட்டு இசை லயத்தைப் பின்பற்ற வேண்டும். | 1<br>1 | 2 |
| 5. | தொன்மை<br>பிறமொழித்தாக்கமின்மை<br>தனித்தன்மை<br>இலக்கிய வளம், இலக்கணச்சிறப்பு | ½<br>½<br>½<br>½ | 2 |
| 6. | மனித நேயப் பண்பு<br>மானிட மகத்துவம் உணர்தல்<br>பிறர் நலம் பேணல்<br>மனிதநேயமின்மை | 1<br>1<br>1<br>1 | 4 |
| 7. | கூடி வாழுதல்<br>தெய்வ நம்பிக்கை<br>பிறந்த இடம் - பெருமை<br>இயல்பான சிந்தனை | 1<br>1<br>1<br>1 | 4 |
| 8. | அ) • எந்த நிலையிலும் முகம் தெரியாத நபர்களிடம் உங்கள் தொலைபேசி, முகவரி போன்றவற்றைப் பகிர்ந்துகொள்ள வேண்டாம்<br>• உங்கள் கடவுச்சொல்லைப் பெற்றோர்களைத் தவிர வேறு யாரிடமும் தெரிவிக்க வேண்டாம்<br>ஆ) • இண்டர்நெட் கடவுச்சொல் திருட்டு<br>• அச்சுறுத்தும் மின்னஞ்சல்கள் | 1<br>1<br>1<br>1 | 4 |
| 9. | ஆறு - வட்டார வழக்குச் சொற்கள்<br>அதற்குச் சமமான தமிழ்ச் சொற்கள்<br>அகரவரிசைப்படுத்தல் | 3<br>1 | 4 |
| 10. | எதைச் செய்தாலும் திட்டமிட்டுச் செய்தல் வேண்டும்<br>மின்னும் எல்லாம் பொன் அல்லாததுபோல - உலகில் பல போலிகளும் உண்டு | 2<br>2 | 4 |

| வரிசை எண் | மதிப்பீட்டுக் குறிப்புகள் | மதிப்பெண் விளக்கம் | மொத்தம் மதிப்பெண் |
|---|---|---|---|
| 11. | பரம்பரை பரம்பரையாக பின்பற்றக்கூடியது | 1 | |
| | மக்களின் பழக்கவழக்கங்களை வெளியிடக் கூடியது | 1 | |
| | எளிதில் புரிந்துகொள்ளக் கூடியது | 1 | |
| | வடிவம் | 1 | 4 |
| 12. | இயற்கையின் சிறப்பு | 2 | |
| | செயற்கையை விட இயற்கையே அழகானது | 2 | |
| | இயற்கையைப் பாதுகாத்தல் | 2 | 6 |
| 13. | திரைக்கதை அமைப்பு | 1 | |
| | மொழிநடை | 1 | |
| | திரைக்கதை உத்தி | 1 | |
| | கதையை நகர்த்திச் செல்லும் பாங்கு | 1 | |
| | பின்புலம் | 1 | |
| | கடிதவடிவம் | 1 | 6 |
| 14. | செம்மொழித்தமிழ் அந்தஸ்து | 1 | |
| | இணையத்தில் தமிழ் வளர்ச்சி | 1 | |
| | தொன்மைச் சிறப்பு | 1 | |
| | இலக்கிய, இலக்கணம் வளமுடையது | 1 | |
| | கலைச்சொல்லாக்கம் | 1 | |
| | வடிவம் | 1 | 6 |
| 15. | விவசாயம் பாதிப்பு | 1 | |
| | சுற்றுப்புறச்சூழல் பாதிப்படைதல் | 1 | |
| | இயற்கைச் சிதைவு | 1 | |
| | இடநெருக்கடி | 1 | |
| | சுகாதாரப் பிரச்சினைகள் | 1 | |
| | வடிவம் | 1 | 6 |
| 16. | கலைகளை ஊக்குவித்தல் | 1 | |
| | கலைஞர்களைப் பாராட்டுதல் | 1 | |
| | கலைகளை நிகழ்த்துவதற்கான வாய்ப்புகளை அளித்தல் | 1 | |
| | பரிசு மற்றும் பாராட்டுகள் அளித்தல் | 1 | |
| | பாடத்திட்டங்களில் உட்படுத்துதல் | 1 | |
| | வடிவம் | 1 | 6 |
| 17. | பெண்ணியம் | 1 | |
| | சாதியப் பிரச்சினைகள் | 1 | |
| | மதப்பிரச்சினைகள் | 1 | |
| | பொருளாதாரப் பிரச்சினைகள் | 1 | |
| | மொழிப் பிரச்சினைகள் | 1 | |
| | மொழிநடை | 1 | 6 |
| 18. | தமிழ்மொழி - தொடர்பான வினாக்கள் ஐந்து | 5 | |
| | வடிவம் | 1 | 6 |

| வரிசை எண் | மதிப்பீட்டுக் குறிப்புகள் | மதிப்பெண் விளக்கம் | மொத்தம் மதிப்பெண் |
|---|---|---|---|
| 19. | ஒளிப்பதிவு சிறப்பு | 1 | |
| | சிறந்த இயக்குநர் | 1 | |
| | புதிய தொழில்நுட்பங்களைக் கையாளுதல் | 1 | |
| | சிறந்த புகைப்படக் கலைஞர் | 1 | |
| | மூடுபனி, அழியாத கோலங்கள் இவரின் சிறந்த திரைப்படங்கள் | 1 | |
| | வடிவம் | 1 | 6 |
| 20. | இணையம் - இதழ்கள் | 1 | |
| | இணையக் கட்டுரைகள் | 1 | |
| | இணைய நூல்கள் | 1 | |
| | இணையவழி கற்றல் | 1 | |
| | இணையவழிக் கற்பித்தல் | 1 | |
| | உலகளாவிய தொடர்பு | 1 | |
| | மொழிநடை | 1 | |
| | வடிவம் | 1 | 8 |
| 21. | பழக்கவழக்கங்கள் | 1 | |
| | நம்பிக்கைகள் | 1 | |
| | உணவு வகைகள் | 1 | |
| | கலைகள் | 1 | |
| | சடங்கு முறைகள் | 1 | |
| | வழிபாட்டு முறைகள் | 1 | |
| | இலக்கியங்கள் | 1 | |
| | மொழிநடை | 1 | 8 |
| 22. | பிறமொழிக் கலப்பு | 1 | |
| | மொழிப்பற்று - இன்மை | 1 | |
| | ஆங்கில மொழிப் பற்று | 1 | |
| | தமிழ்வழிக் கற்றலும் வேலைவாய்ப்பின்மையும் | 1 | |
| | தமிழ்வழிக் கற்றலில் ஆர்வமின்மை | 1 | |
| | ஊடகங்கள் தமிழ்மொழியைச் சரியாகப் பின்பற்றாமை | 1 | |
| | மொழிநடை | 1 | |
| | வடிவம் | 1 | 8 |
| | **மொத்தம்** | 80(24) | 80(24) |